ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2025.11.17 |



# இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2025 ஒத்தோபர்

## கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், 2025 ஒத்தோபரில் தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிலும் விரிவடைதலை எடுத்துக்காட்டுகின்றன

**தயாரிப்பிற்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு), 2025 ஒத்தோபரில் 61.0 சுட்டெண் பெறுமதியைப் பதிவுசெய்து, தயாரிப்பு நடவடிக்கைகளில் அதிகரிப்பொன்றை எடுத்துக்காட்டுகின்றது.** அனைத்து துணைச் சுட்டெண்களும் வளர்ச்சிக்காக சாதகமாக பங்களித்து, இவ்வதிகரிப்பானது பரந்த அடிப்படையினைக் கொண்டு காணப்படுகின்றது.

**தயாரிப்பு கொ.மு.சு 2025 ஒத்தோபர் 61.0**

பல பதிலிறுப்பாளர்கள் எதிர்வரும் பண்டிகை பருவக்காலத்திற்கான உற்பத்தி கட்டளைகளை பெற்றுள்ளதுடன், உணவு மற்றும் குடிபானங்கள் துறையின் தயாரிப்பால் தூண்டப்பட்டு, புதிய கட்டளைகள் துணைச் சுட்டெண்ணில் குறிப்பிடத்தக்க விரிவாக்கம் ஏற்பட்டது. மேலும், பண்டிகை கேள்விக்கு பதிலிறுக்கும் வகையில் ஒத்தோபர் காலப்பகுதியில் நிறுவனங்கள் தமது உற்பத்தியை மேம்படுத்தி, உற்பத்தி துணைச் சுட்டெண்ணில் அதிகரிப்பொன்றை விளைவித்தது. இதற்கு மேலதிகமாக, புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தியில் அவதானிக்கப்பட்ட விரிவாக்கங்களுக்கிசைவாக, தொழில்நிலை துணைச் சுட்டெண் மீட்சியடைந்ததுடன் கொள்வனவுகளின் இருப்பு துணைச் சுட்டெண்ணும் அதிகரித்தது. அதேவேளை, நிரம்பலர்களின் விநியோக நேரம் மாதகாலப்பகுதியில் தொடர்ந்தும் நீட்சியடைந்து காணப்பட்டது.



மூலம்: இலங்கை மத்திய வங்கி

*கொமுசு தொகுப்பு - தயாரிப்பு அளவீடு*

| மாறி | செத் | ஒத் | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு – தயாரிப்பு** | **55.4** | **61.0** | **+** | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 59.0 | 64.0 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| உற்பத்தி | 55.5 | 62.5 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 46.0 | 56.0 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| கொள்வனவுகளின் இருப்பு | 57.5 | 62.5 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 59.0 | 58.0 | - | நீட்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

எதிர்வரும் பண்டிகை பருவகாலம் காரணமாக சாதகமான எண்ணப்பாங்கினை பிரதிபலித்து, அடுத்தவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் சாதகமாகக் காணப்படுகின்றன.

**உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு தயாரிப்புத் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, அதே வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| யூரோ வலயம் | வீழ்ச்சியிலிருந்து நடுநிலை |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2025 நவெம்பர் 17 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1]எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**பணிகளுக்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – பணிகள்), 2025 ஒத்தோபரில் 66.0 சுட்டெண் பெறுமதியைப் பதிவுசெய்து, கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலொன்றை எடுத்துக்காட்டுகின்றது.**

அநேகமான துறைகளுக்கிடையிலான வலுவான உத்வேகத்தை பிரதிபலித்து, 2025 ஒத்தோபரில் வியாபார நடவடிக்கைகள் விரைவான வேகமொன்றில் விரிவடைந்தன. மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத்தில் வலுவான செயலாற்றத்தின் மூலம் வளர்ச்சி தூண்டப்பட்டிருந்தது. இதற்குமேலதிகமாக, அதிகரித்த கடன்வழங்கல் செயற்பாடுகளால் துணையளிக்கப்பட்டு, நிதியியல் பணிகளுடன் தொடர்புபட்ட வியாபார நடவடிக்கைகளும் தொடர்ந்து மேம்பட்டன. ஏனைய தனிப்பட்ட சேவை நடவடிக்கைகள் மற்றும் பொருட்களின் போக்குவரத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகள் என்பனவும் ஒட்டுமொத்த விரிவாக்கத்திற்கு சாதகமாகப் பங்களித்தன.

மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத்திற்கான உயர்ந்தளவு கேள்வி அதேபோன்று நிதியியல் பணிகளில் மேம்பட்ட நடவடிக்கைகள் என்பவற்றுடன் புதிய வியாபாரங்கள் 2025 ஒத்தோபரில் அதிகரித்தன.

தொழிற்பாட்டுத் தேவைகளை பொருந்தச்செய்வதற்கு, நிறுவனங்கள் ஆட்சேர்ப்பினை சீராக்கம் செய்ததால், முன்னைய மாதத்தை விட குறைந்த வேகமாக காணப்பட்டாலும், 2025 ஒத்தோபரில் தொழில்நிலை தொடர்ந்தும் அதிகரித்தது. எனினும், நிலுவையிலுள்ள பணிகள் 2025 செத்தெம்பரில் உள்ளவாறு அதே வீதத்தில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன.

***கொமுசு தொகுப்பு - பணிகள் அளவீடு***


| மாறி | செத் | ஒத் | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)** | **58.7** | **66.0** | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| புதிய வியாபாரங்கள் | 65.2 | 61.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 53.1 | 52.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 47.8 | 47.8 | = | வீழ்ச்சியடைகின்றது, அதே வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 81.1 | 84.2 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்து வருகின்ற மூன்று மாதங்களுக்கான வியாபார நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள், சாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமைகள், சுற்றுலாப் பயணிகளின் அதிகரித்த வருகைகள் மற்றும் பண்டிகை பருவகாலப்பகுதியில் காணப்படும் கேள்வியில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பு என்பவை மூலம் துணையளிக்கப்பட்டு தொடர்ந்தும் வலுவடைந்தன.

**கொ.மு.சு**
**பணிகள்**
**வியாபார நடவடிக்கைச் சுட்டெண்**
**2025 ஒத்தோபர்**
**66.0**

கொ.மு.சு - பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு பணிகளின் தொகுப்பு

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| யூரோ வலயம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[i], 2025 நவெம்பர் 17 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

**கொமுசு – தயாரித்தல்,** தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும்.
பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது, **கொமுசு – பணிகள்** எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் விநியோக நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.